# பண்ணிசை ஓதுவோம்

பண்ணிசைப் போட்டியை ஒட்டிய ஒரு கையேடு - 1991

அழகியற் பகுதி
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கல்விப் பணிப்பாளரின் செய்தி

# பண்ணோடு இசை பாடும் பண்பு

பாடசாலைக்கல்வி பரீட்சைக்குக் கற்றுத் தேறுவது என்பது பழைய நிலை; வாழ்க்கைக்குத் தேவையான பல அநுபவங்களையும் பாடசாலையும் வழங்கவேண்டும் என்பது இன்றைய கல்வியாளரின் முடிவு. இதனாலே தான் ஒரு காலத்திலே புறக்கிருத்தியங்களாகக் கருதப்பட்டவை இன்று இணைபாட விதானமாகப் பரிணமித்துள்ளது. இத்தகைய செயற்பாட்டு நோக்கிலே பாடசாலைகளில் இன்று பல்துறைப் போட்டிகளையும் யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்கிறது. அவற்றுள் ஒன்று தான் பண்ணிசைப்போட்டி

சமயசீலம், நல்லொழுக்கம், மனக்குவிவு, நற்சிந்தனை, மன அமைதி விட்டுக்கொடுத்தல், கூட்டியக்கம், சமூக இசைவாக்கம் முதலாம் நற்பண்புகள் பலவற்றை இப்பண்ணிசையிற் பங்குபற்றும் மாணவர் பெறுவது திண்ணம்.

* திருமுறைப் பாடல்களை வகுப்புக்கும் வயதுக்கும் பொருத்தமாகத் தெரிவது
* பண்முறைக்கு அமையச் சொற்பதம் பிரித்து ஓதல்
* புதிய பாடல்களைச் சேர்த்துக் கொள்ளல்

போன்றவற்றின் மூலம் இத்திரட்டில் அடங்கும் பாடல்களை ஆசிரியர் மாணவர்களுக்குக் கல்வித் திணைக்கள அழகியற் பகுதி முன்வைத்துள்ளது. இப்பணியின் உத்தம பயன்பாடு கருதி இதனை ஒரு சிறு கையேடாக அச்சேற்றி வழங்க முன்வந்தவர்களைப் பாராட்டுகிறேன். "பண்ணோடு இசை பாடும் பண்பு" பாடசாலைகளிருந்து பல்கலைக் கழகத்துக்கும் சமூகத்துக்கும் பரவும்வகை செய்தல் வேண்டும்.

கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்
1991-12-31

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# பாலர் பிரிவு

## திரு அங்க மாலை

### தேவாரம்

பண்: சாதாரி
இராகம். பந்துவராளி

அருளியவர்: திருநாவுக்கரசர்
தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் — தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ — கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ — சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ 3

# ஆரம்ப பிரிவு

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்: காந்தார பஞ்சமம்
இராகம்: கேதாரகௌளை

அருளியவர்: திருநாவுக்கரசர்
தாளம்: ஆதி

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே 2

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார்தமக் கிடுக்க ணில்லையே. 3

## புராணம்

இராகம்: மத்தியமாவதி

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

# கீழ்ப் பிரிவு

## திருக்கோணேச்சரப் பதிகம்

## தேவாரம்

பண்: புறநீர்மை — அருளியவர்: திருஞானசம்பந்தர்
இராகம்: பூபாளம் — தாளம்: ஆதி

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரே. 2

## திருப்புராணம்

*இராகம் மத்தியமாவதி:*

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

# கனிட்ட இடைநிலை

## தேவாரம்

*பண்: நட்டபாடை* *அருளியவர்: திருஞானசம்பந்தர்*
*இராகம்: கம்பீரநாட்டை* *தாளம்: ரூபகம்*

பண்ணும்பதம் ஏழும்பல வோசைத் தமிழவையும்
உண்ணின்றதோர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும் வருகாற்றும் சுடர்மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம் மிழலையே. 1

## தேவாரம்

*பண்: பழம்பஞ்சரம்* *அருளியவர்: திருஞானசம்பந்தர்*
*இராகம்: சங்கராபரணம்* *தாளம்: ஆதி*

சதிமிக வந்த சலந்தரனே
தடிசிர நேர்கொள் சலந்தரனே
அதிரொளி சேர்திகிரிப் படையால்
அமர்ந்தனர் உம்பர் துதிப்படையால்
மதிதவழ் வெற்பது கைச்சிலையே
மருவிட மேற்பது கைச்சிலையே
விதியினி லிட்ட விரும்பரனே
வேணு புரத்தை விரும்பரனே. 2

## தேவாரம்

பண்: பியந்தைக் காந்தாரம் அருளியவர்: திருஞானசம்பந்தர்
இராகம்: நவரோஸ் தாளம்: திஸ்ர திரிபுடை

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

## திருவாசகம்

இராகம்: மோகனம் அருளியவர்: மாணிக்கவாசகர்

### திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருவாசகம்

இராகம்: மோகனம் அருளியவர்: மாணிக்கவாசகர்

### குழைத்தபத்து

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே
— கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண்
— எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

இராகம்: ஆனந்த பைரவி — அருளியவர்: சேந்தனார்

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

இராகம்: ஆனந்த பைரவி — அருளியவர்; சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இராகம் மத்தியமாவதி: — அருளியவர்: சேக்கிழார்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். 1

## திருப்புராணம்

இராகம்: மத்தியமாவதி — அருளியவர் சேக்கிழார்

ஆதியாய் நடுவும்ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம்ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

# சிரேட்ட இடைநிலை

## தேவாரம்

பண் : அந்தாளிக் குறிஞ்சி அருளியவர் : திருஞானசம்பந்தர்
இராகம் : சாமா தாளம் : ஆதி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே.

## தேவாரம்

பண் : தக்கேசி அருளியவர் : சுந்தரர்
இராகம் ; காம்போதி தாளம் : ஆதி

ஆலந்தான்உகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சிலந்தான் பெரிதும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும்ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்ப னெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

## திருவாசகம்

இராகம் : மோகனம் அருளியவர் : மாணிக்கவாசகர்

சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தெனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவாசகம்

இராகம்: மோகனம் அருளியவர்: மாணிக்கவாசகர்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம்பரனே
 பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
 ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
 வருகஎன் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

இராகம்: ஆனந்தபைரவி அருளியவர்: திருவாலியமுதனார்

பவளமால் வரையைப் பனிபடர்ந்
 தனையதோர் படரொளி தருதிருநீறும்
குவளைமாமலர்க் கண்ணியும் கொன்றையும்
 துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லை
 யுள்திரு நடம் புரிகின்ற
தவள வண்ண னைநினை தொறும்
 என்மனம் தழல்மெழுகு ஒக்கின்றதே.

## திருபல்லாண்டு

இராகம் : ஆனந்த பைரவி அருளியவர்: சேந்தனார்

சொல்லாண்ட சுருதிப்பொருள்
 சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில
 தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
 மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
 தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இராகம்: மத்தியமாவதி அருளியவர்: சேக்கிழார்

நன்மை பெருகருள் நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'' என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## திருப்புராணம்

இராகம்: மத்தியமாவதி அருளியவர்: சேக்கிழார்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்

# மேல் நிலை

## திருத்தாண்டகம்

பண்: குறிஞ்சி அருளியவர்: திருநாவுக்கரசர்

இராகம்: அரிகாம்போதி

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணை மேல்வரும் பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1

## திருத்தாண்டகம்

பண்: குறிஞ்சி அருளியவர்: திருநாவுக்கரசர்
இராகம்: அரிகாம்போதி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே. 2

## திருவாசகம்

இராகம்; மோகனம் அருளியவர்: மாணிக்கவாசகர்

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்தெனதுள்ளம் புகுந்தடி யேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 1

## திருவாசகம்

இராகம்: மோகனம் அருளியவர்: மாணிக்கவாசகர்

நானார்என் உள்ளமார் ஞானங்களா ரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனாருடை தலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

## திருவிசைப்பா

இராகம்: ஆனந்த பைரவி அருளியவர்: கருவூர்த்தேவர்

புவன நாயகனே! அகவுயிர்க்கு அமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவள வாய் மணியே! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதி! பன்னகா பரணா!
அவனி ஞாயிறு போன்று அருள்புரிந்து அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே.

## திருப்பல்லாண்டு

இராகம் : ஆனந்த பைரவி அருளியவர் : சேந்தனார்

ஆரார் வந்தார்? அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயண னொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இராகம் ; மத்தியமாவதி அருளியவர் : சேக்கிழார்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

## திருப்புராணம்

இராகம்: மத்தியமாவதி அருளியவர்: சேக்கிழார்

பண்ணின் பயனாம் நல்லிசையும்
பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும்
கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழி மழையும்
வேதப் பயனாம் சைவமும் போல்
மண்ணின் பயனாம் அப் பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ?

திருச்சிற்றம்பலம்